

இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

செவ்வாய்க்கிழமை 28.04.2026


# இரட்டை எஞ்சினால் அணைக்க முடியாத மணிப்பூர்!

**2023** ஆம் ஆண்டு மே மாதத்தில் இருந்து எரிகிறது மணிப்பூர். இரட்டை எஞ்சினால் இன்னமும் அணைக்க முடியவில்லை.

**தமிழ்நாட்டுக்குப் பரப்புரைக்கு வந்த பிரதமர் நரேந்திர மோடியும், உள்துறை அமைச்சர் அமித்ஷாவும், 'மத்தியிலும் மாநிலத்திலும் பா.ஜ.க. ஆட்சி அமைந்தால், அந்த இரட்டை எஞ்சின் வளர்ச்சி ஏற்படும்' என்று சொல்லிப் போனது பொய் என்பதை மணிப்பூர் மூன்று ஆண்டுகளாக மெய்ப்பித்து வருகிறது. இதையேதான் இவர்கள் மேற்கு வங்க தேர்தல் பரப்புரையிலும் சொல்லி ஏமாற்றி வருகிறார்கள்.**

மணிப்பூரில் இரண்டு நாட்களுக்கு முன் நடந்த வன்முறையில் 3 பேர் பலியாகி இருக்கிறார்கள். மணிப்பூர் மாநிலம், உக்ருல் மாவட்டத்தின் சில பகுதிகளில் இரு சமூகத்தினரிடையே மீண்டும் வன்முறை வெடித்துள்ளது. இதில்தான் 3 பேர் பலியானார்கள். பெண்கள் மற்றும் குழந்தைகள் உட்பட பலர் காயமடைந்தனர். இரண்டு வீடுகள் தீயிட்டு கொளுத்தப்பட்டன.

**முல்லம், ஷோங்ஃபால் ஆகிய கிராமங்கள் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. முல்லம் கிராமத்தில் ரோந்துப் பணியில் ஈடுபட்டவர்கள் மீது ஆயுதக் குழுவினர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 29 வயது தன்னார்வலர் ஒருவர் கொல்லப்பட்டார். நான்கு பேர் காயமடைந்தனர். இதனைத் தொடர்ந்தே பதிலடி மோதல் ஏற்பட்டுள்ளது.**

ஏப்ரல் 7 ஆம் தேதி பிஷ்ணுபூர் மாவட்டத்தில் மொய்ராங் ட்ராங்லாபி பகுதியில் உள்ள வீடு ஒன்றின் மீது மர்ம நபர்கள் குண்டுகளை வீசி தாக்குதல் நடத்தினர். இதில் வீட்டில் தூங்கிக் கொண்டிருந்த 5 வயது சிறுவனும், 6 மாதக் குழந்தையும் கொல்லப்பட்டனர். அப்பாவி குழந்தைகளைக் கொன்றவர்களை விரைந்து கைது செய்ய வலியுறுத்தி பல்வேறு அமைப்புகள் சார்பில் தொடர் போராட்டங்கள் நடந்து வருகின்றன. இரண்டு குழந்தைகள் உயிரிழந்த சம்பவம் அம்மாநிலத்தில் மீண்டும் பதற்றத்தை ஏற்படுத்தி இருக்கிறது.

**அங்கு நிறுத்தப்பட்டிருந்த இரு ஆயில் டேங்கர்கள், ஒரு லாரியை தீ வைத்து எரித்தனர். அருகேயுள்ள தற்காலிகப் போலீஸ் நிலையத்தையும் அவர்கள் சூறையாடினர்.**

**குழந்தைகளைக் கொன்ற குற்றவாளிகளை உடனே கைது செய்யக்கோரி, கடந்த ஏப்ரல் 18ஆம் தேதி இம்பால் மேற்கு மாவட்டத்தின் சிங்ஜாமில் தீப்பந்த ஊர்வலம் நடைபெற்றது. அப்போது போராட்டக்காரர்களில் சிலர், தடையை மீறி மணிப்பூர் முதலமைச்சரின் வீட்டை முற்றுகையிட சென்றனர். இதையடுத்து அவர்கள் மீது, கண்ணீர் புகைக் குண்டுகளை வீசியும், தடியடி நடத்தியும் பாதுகாப்புப் படையினர் கலைத்தனர். இச்சம்பவம் தொடர்பாக இதுவரை 21 பேரை போலீசார் கைது செய்தனர்.**

சமூக ஊடகங்களில் வன்முறையைத் தூண்டும் வகையில் கருத்துகளைப் பதிவிட்ட 23 வயது இளைஞரையும் போலீசார் கைது செய்தனர். வன்முறையைத் தூண்டவோ அல்லது சமூக நல்லிணக்கத்தைக் குலைக்கவோ முயற்சிக்கும் எவர் மீதும் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் காவல் துறையினர் எச்சரித்துள்ளனர்.

மார்ச் 26 அன்று இந்திய ராணுவம் மற்றும் அசாம் ரைபிள் படையினர், மணிப்பூர் போலீசாருடன் ஒருங்கிணைந்து மாநிலம் முழுவதும் முழு அளவில் சோதனையில் ஈடுபட்டனர். இதில், இம்பால் கிழக்கு, இம்பால் மேற்கு பிஷ்ணுபூர், சந்தேல், கங்போக்பி, சுராசந்த்பூர் மற்றும் தெங்னவுபோல் மாவட்டங்களில் தொடர்ச்சியாக நடத்திய சோதனைகளில் மலை மற்றும் பள்ளத்தாக்குப் பகுதிகளில் செயல்பட்டு வந்த பயங்கரவாதக் குழுக்களைச் சேர்ந்த 17 பேர் கைது செய்யப்பட்டு உள்ளனர். அவர்களிடம் இருந்து சக்தி வாய்ந்த வெடிகுண்டுகள், வெடிபொருட்கள், துப்பாக்கிகள், கைத்துப்பாக்கிகள், தோட்டாக்கள், மொபைல் போன், சிம் கார்டு, போரில் பயன்படுத்தும் ஆயுதங்கள் உள்ளிட்டவற்றை பறிமுதல் செய்தனர்.

**ஏப்ரல் 25 அன்று மணிப்பூர் ஒருமைப்பாட்டிற்கான ஒருங்கிணைப்புக் குழு சார்பில் மாபெரும் பேரணி நடந்துள்ளது. முதலமைச்சர் யும்னம் கேம் சந்த் சிங்கின் இல்லத்தை நோக்கி நான்கு திசையில் இருந்தும் போராட்டக்காரர்கள் திரண்டு வந்துள்ளனர். போராட்டக்காரர்களை பாதுகாப்புப் படையினர் தடுத்தனர். கண்ணீர்ப் புகைக் குண்டுகளை வீசினார்கள். இந்த மோதலில் 22 பேர் காயம் அடைந்தனர். ஏப்ரல் 7 ஆம் தேதி இரண்டு குழந்தைகள் கொல்லப்பட்டதற்கு நீதி கேட்டு முதலமைச்சரிடம் கடிதம் தரப்பட்டுள்ளது.**

குறிப்பிட்ட சமூக மக்களுக்கு ராணுவச் சீருடைகள் தரப்பட்டு அவர்கள் மற்ற சமூக மக்கள் மீது தாக்குதல் நடத்தத் தூண்டி விடப்படுவதாக 'வாய்ஸ் ஆப் தி நாகா யூத்' என்ற அமைப்பு குற்றம் சாட்டி உள்ளது.

இப்படி நாள் தோறும் மணிப்பூரில் இருந்து பதற்றம் ஏற்படுத்தும் செய்திகள் வந்து கொண்டே இருக்கின்றன.

மணிப்பூரின் மெய்தேய் சமூகத்தினரைப் பட்டியல் பழங்குடியினராக அறிவிப்பது தொடர்பாக நடவடிக்கை எடுக்குமாறு மணிப்பூர் பா.ஜ.க. அரசுக்கு அம்மாநில உயர் நீதிமன்றம் 2023 மார்ச் 27இல் உத்தரவு பிறப்பித்தது. இதனை குக்கி சமூகத்தினர் எதிர்க்கிறார்கள். மே 3இல் மெய்தேய் சமூகத்தினருக்கும் குக்கி பழங்குடிகளுக்கும் இடையே மோதல் வெடித்தது. இந்தக் கலவரத்தில் 250க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர். 60,000க்கும் மேற்பட்டோர் வீடுகளை இழந்தனர். இவ்வளவுக்குப் பிறகும் பா.ஜ.க. முதலமைச்சர் பிரேன் சிங்கை காப்பாற்றி வைத்திருந்தது பா.ஜ.க. தலைமை. ஒன்றரை ஆண்டுகள் கழித்து முதலமைச்சர் பதவியிலிருந்து பிரேன் சிங் விலகினார். அங்கு குடியரசுத் தலைவர் ஆட்சி அமல்படுத்தப்பட்டது. ஏறத்தாழ ஓர் ஆண்டு காலத்துக்குப் பின்னர் பா.ஜ.க.வின் யும்நம் ஹேம்சந்த் சிங் தலைமையில், 2026 பிப்ரவரியில் புதிய அரசு அமைந்தது. புதிய அரசு அமைந்த பிறகும் மாநிலம் அமைதியாகவில்லை.

**மணிப்பூரை அமைதியாக்க மாநில பா.ஜ.க. அரசாலும் முடியவில்லை. ஒன்றிய பா.ஜ.க. அரசாலும் முடியவில்லை. உண்மையில் பிரதமர் மோடிக்கு மணிப்பூரைப் பற்றி அக்கறை இல்லை. கலவரம் தொடங்கி 862 நாட்களுக்குப் பிறகுதான் மணிப்பூர் சென்றார் பிரதமர் மோடி. 2024 ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் வாக்குக் கேட்டுக் கூட மணிப்பூர் போகவில்லை பிரதமர். அந்தளவுக்குத் தான் அவருக்கு அமைதி மீதும், மக்கள் மீதும் அக்கறையே!**

**இரட்டை எஞ்சின் பற்றி வாய் கிழியப் பேசும், உள்துறை அமைச்சர் அமித்ஷாவால் மணிப்பூரை அமைதியாக்க முடியவில்லை. சர்தார் படேலுக்கு அடுத்தபடியாக 'இரும்பு மனிதர்' பெயர் பலகையைப் பொருத்திக் கொள்ளும் அமித்ஷாவால் மணிப்பூரை அமைதியாக்க முடியாமல் போனது அக்கறையின்மையா? தகுதியின்மையா?**

---

### சர். பிட்டி. தியாகராயருக்கு 'திராவிட மாடல்' ஆட்சி மாலையிடும்!

# அந்த மாலைதான், "மீண்டும் ஸ்டாலின் கோட்டையில்" என்பதற்கான அடையாளம்!

## திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி பேட்டி!



*சென்னை, ஏப். 28 -*

*சர். பிட்டி. தியாகராயருக்கு 'திராவிட மாடல்' ஆட்சி மாலையிடும். அந்த மாலைதான், "மீண்டும் ஸ்டாலின் கோட்டையில்" என்பதற்கான அடையாளம். சென்னை கோட்டை - தி.மு.க. கூட்டணிக்கு; மனக் கோட்டை - மற்ற அணிகளுக்கு! என்று திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் பேட்டி அளித்தார்.*

*வெள்ளுடை வேந்தர் சர். பிட்டி. தியாக ராயரின் பிறந்த நாள். சென்னை மாநகராட்சி அலுவலகத்தில் அமைந்துள்ள அவரது சிலைக்கு மாலை அணிவித்த பின், திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் செய்தியாளர்களுக்குப் பேட்டியளித்தார்.*

*அப்பேட்டியின் விவரம் வருமாறு: -*

*'தென்னிந்திய நல உரிமைச் சங்கம்' என்ற திராவிடர் இயக்கம் முதன் முதலாக உருவாவதற்குத் தலைமையேற்ற, வெள்ளுடை வேந்தர் என்று உலகத்தாரால் அறிமுகப் படுத்தப்பட்ட, வரலாற்றுப் பெருமை மிகுந்த ஒரு வாழ்வை அமைத்த சர். பிட்டி. தியாகராயர் அவர்களுடைய பிறந்த நாள் இன்று!*

*'திராவிட மாடல்' ஆட்சி இன்றைக்கு உலகம் போற்றக் கூடிய அளவிற்கு வந்திருக்கிறது. 'பார்ப்பனரல்லாதார் இயக்கம்' என்று தொடங்கப் பெற்று, அது 'தென்னிந்திய நல உரிமைச் சங்கம்' என்று பதிவு செய்யப்பட்டு, 'ஜஸ்டிஸ்' கட்சி என்று மக்களால் அறிமுகப்படுத்தப்பட்ட ஓர் இயக்கத்தினுடைய முப்பெரும் தலைவர்களில், சர்.பிட்டி தியாகராயர் அவர்கள்தான் தலைமையேற்றவர். திராவிடர் ஆட்சியை அமைப்பதற்கு வழிகாட்டியவர்கள். அதனுடைய அடித்தளம் ஆனவர்கள்.*

**கொள்கை அறிக்கை!**

*1916 ஆம் ஆண்டு 'பார்ப்பனரல்லாதார் கொள்கை அறிக்கை' (Non Brahmin Manifesto) என்று உருவாக்கி, அதன்மூலம் கல்வி, உத்தியோகத் துறைகளில், எப்படியெல்லாம் நம்முடைய உரிமைகள், வாய்ப்புகள் மறுக்கப்பட்டன என்பதை புள்ளி விவர ரீதியாக எடுத்துச் சொல்லி, தெளிவுபடுத்தி, ஒரு பெரிய இயக்கத்தை உருவாக்கிய பெருமை, அவருக்கும், அவரைச் சார்ந்த தளபதிகளாக இருந்த டி.எம்.நாயர் அவர்களுக்கும், சி.நடேசனார் அவர்களுக்கும் உரியது.*

*அந்த அடித்தளத்தின் படி - அதற்குப் பிறகு 17 ஆண்டுகள் நீதிக்கட்சி ஆட்சி நடந்தது. பல ஆண்டுகள் கழிந்தும் கூட, மற்றவர்கள் சொன்னார்கள், 'நீதிக்கட்சியைக் குழி தோண்டிப் புதைத்து விட்டோம்" என்று.*

*அதற்குப் பிறகு பேரறிஞர் அண்ணா அவர்கள், 1967 ஆம் ஆண்டு ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் மிகத் தெளிவாக "நீதிக்கட்சியின் பேரனான நான் மீண்டும் ஆட்சி அமைத்திருக்கிறேன்" என்றார். அதைத் தொடர்ந்து கலைஞர் அவர்கள், அந்த ஆட்சியினுடைய பெருமைகளை, சாதனைகளை உயர்த்தினார்.*

*அவருக்குப் பிறகு, அதனை மேலும் 'திராவிட மாடல்' ஆட்சியாக்கி, இன்றைக்கு இந்தியாவே திரும்பிப் பார்க்கக்கூடிய ஓர் அற்புதமான ஆட்சியை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அளித்து வருகிறார். சிலையாக மட்டுமல்ல, நமக்கெல்லாம் வழிகாட்டக்கூடிய சீலமாகவும் விளங்குகிறார்!*

*எனவே, ஒரு நீண்ட பாரம்பரியத்திற்கு அடித்தளமாக, காரணமாக இருந்து அடிக்கட்டுமானத்தை உருவாக்கிய அந்த மாபெரும் தலைவருடைய பிறந்த நாள். தந்தை பெரியார் அவர்கள் அதனை ஒருங்கிணைந்து, நீதிக்கட்சியையும் - சுயமரியாதை இயக்கத்தையும் இணைத்து 'திராவிடர் கழகமாகி' - திராவிடர் கழகம் பிறகு இரட்டைக் குழல் துப்பாக்கியாக - திராவிடர் கழகம் - திராவிட முன்னேற்றக் கழகமாக வளர்ந்த ஓர் அரசியல் சரித்திரத்தின் தொடக்கத்திற்கு உரியவர்தான் இன்றைக்குச் சிலையாக மட்டுமல்ல, நமக்கெல்லாம் வழிகாட்டக் கூடிய சீலமாகவும் இருக்கக்கூடிய சர். பிட்டி தியாகராயர் அவர்கள்.*

*அவருடைய பிறந்த நாளை, நாம் ஒவ்வொரு ஆண்டும் சடங்காக, சம்பிரதாயமாகவோ கடைப்பிடிப்பதில்லை - சரித்திர அடையாள நாளாகக் கடைப்பிடித்து, அதன்மூலமாகத் தமிழ்நாடு யாருக்கும் அடிமையாக்கப்படக் கூடாத ஒன்று - உரிமை முழக்கம் செய்யவேண்டிய ஒன்று என்பதை நாம் தொடர்ந்து அனைவருக்கும் விளக்கவேண்டும்.*

*கல்வி, வேலை வாய்ப்புகள், சமூகநீதி என்ற அந்தத் தொடக்கவுரையை அவர்தான் உருவாக்கி வைத்தார். அந்த எழுச்சியை இன்றைக்குப் பார்க்கிறோம்.*

**வீறுநடை – வேக நடை போட்டு எழுச்சியை உருவாக்குவோம்!**

*தேர்தல்கள் ஒரு களம், அவ்வளவுதான். பண்பாட்டுப் புரட்சியை அந்தத் தலைவர்கள் தெளிவாக உருவாக்கினார்கள். அதைத் தொடர்வோம், சூளுரைப்போம், சுயமரியாதை உணர்வைப் பெறுவோம்! அவர் வழியில் என்றென்றைக்கும் வீறுநடை - வேக நடை போட்டு எழுச்சியை உருவாக்குவோம்.*

**1971 ஆம் ஆண்டு நிலை – மே 4ஆம் தேதிக்குப் பிறகு வரும்!**

**செய்தியாளர்:** *மே 4 ஆம் தேதி வெளிவரக்கூடிய தேர்தல் முடிவை எப்படி எதிர்பார்க்கிறீர்கள்? 2006 ஆம் ஆண்டு விஜயகாந்த் வாக்குகளைப் பிரித்தது போன்று, 2026 ஆம் ஆண்டு விஜய் வாக்குகளைப் பிரிப்பார். தனிப்பெரும்பான்மை என்பது எந்தக் கட்சிக்கும் கிடைக்காது. கூட்டணி ஆட்சிக்குத்தான் வாய்ப்பு என்று சொல்கிறார்களே?*

**கி.வீரமணி:** *2006 ஆம் ஆண்டோடு நிறுத்தியிருக்கிறார்கள். அதற்கு முன்பு அவர்கள் போகவேண்டும். 1971 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் 184 இடங்களைப் பெற்று தி.மு.க. வரலாறு படைத்தது. "இதோடு முடிந்தது. இனி தி.மு.க. ஆட்சிக்கு வராது" என்று ஆருடம் கணித்தவர்கள் எல்லாம், அடையாளம் தெரியாமல் ஓடிவிட்டார்கள் - துண்டைக் காணோம், துணியைக் காணோம் என்று! 1971 ஆம் ஆண்டு நடைபெற்ற அதே நிலை, மே 4 ஆம் தேதிக்குப் பிறகும் வரும்.*

*இதே இடத்திற்கு வந்து, சர். பிட்டி. தியாகராயருக்கு 'திராவிட மாடல்' ஆட்சி மாலையிடும். அந்த மாலைதான், "மீண்டும் ஸ்டாலின் கோட்டையில்" என்பதற்கான அடையாளம். அதை நீங்கள் விரைவில் காணுவீர்கள். சென்னை கோட்டை - தி.மு.க. கூட்டணிக்கு; மனக்கோட்டை - மற்ற அணிகளுக்கு!*

*- இவ்வாறு திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் செய்தியாளர்களிடையே கூறினார்.*

---

### காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் – 6 சட்டமன்றத் தொகுதிகளில்

# கழக - கூட்டணி வேட்பாளர்களுக்காக தேர்தல் பணியாற்றிய நிர்வாகிகளுக்கு நன்றி!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் தா.மோ.அன்பரசன் அறிக்கை!

*காஞ்சிபுரம், ஏப்.28-*

*காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள ஆலந்தூர் - திருப்பெரும்புதூர் - பல்லாவரம் - தாம்பரம் - செங்கல்பட்டு - திருப்போரூர் ஆகிய 6 சட்டமன்றத் தொகுதியில் போட்டியிட்ட கழக - கூட்டணிக் கட்சிகளின் வேட்பாளர்களுக்காக இரவு - பகல் பாராமல் தேர்தல் பணியாற்றிய தி.மு.க. மற்றும் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணிக் கட்சிகளின் நிர்வாகிகள் அனைவருக்கும் மாவட்ட தி.மு.க. சார்பில் கோடானு கோடி நன்றியை மாவட்டச் செயலாளர் - அமைச்சர் தா.மோ.அன்பரசன் தெரிவித்துள்ளார்.*

*இதுகுறித்து மாவட்டச் செயலாளர் - அமைச்சர் தா.மோ.அன்பரசன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:*

*காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் 28-ஆலந்தூர், 29-திருப்பெரும்புதூர், 30பல்லாவரம், 31தாம்பரம், 32செங்கல்பட்டு, 33-திருப்போரூர் ஆகிய 6 சட்டமன்றத் தொகுதிகள் அடங்கி உள்ளன.*

*28-ஆலந்தூர் சட்டமன்றத் தொகுதியில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணிக் கட்சிகளின் சார்பில் தி.மு. கழக வேட்பாளராக நான் (தா.மோ.அன்பரசன்) போட்டியிட்டேன்.*

*வெற்றிச் சின்னமான உதயசூரியன் சின்னத்தில் போட்டியிட்ட எனது வெற்றிக்காக இரவு - பகல் பாராமல் தேனீக்களை போல சுறுசுறுப்பாக பணியாற்றிய ஆலந்தூர் தொகுதியில் அடங்கிய தி.மு. கழக நிர்வாகிகள் மற்றும் கூட்டணிக் கட்சிகளின் நிர்வாகிகள் உள்ளிட்ட ஒட்டு மொத்த நிர்வாகிகள் அனைவருக்கும் என்னுடைய நெஞ்சம் நிறைந்த நன்றிகளை தெரிவித்து மகிழ்கிறேன்.*



*அதேபோன்று 29-திருப்பெரும்புதூர் சட்டமன்றத் தொகுதியில் போட்டியிட்ட காங்கிரஸ் வேட்பாளர் - தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவர் கு.செல்வப் பெருந்தகை, 30-பல்லாவரம் தொகுதியில் போட்டியிட்ட மாவட்ட தே.மு.தி.க. செயலாளர் அனகை முருகேசன்*

*31-தாம்பரம் தொகுதியில் போட்டியிட்ட தி.மு.க. வேட்பாளர் ஆர்.எஸ்.கிருத்திகா தேவி*

*32-செங்கல்பட்டு தொகுதியில் போட்டியிட்ட தி.மு.க. வேட்பாளர் எம்.கே.டி. கார்த்திக்*

*33-திருப்போரூர் தொகுதியில் போட்டியிட்டு விடுதலை சிறுத்தைகள் கட்சி வேட்பாளர் பன்னீர் தாஸ் ஆகிய 6 வெற்றி வேட்பாளர்களையும் ஆதரித்து கண் தூஞ்சாமல் தேர்தல் பணியாற்ற தி.மு. கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு, கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி, தலைமை தீர்மானக்குழு செயலாளர் மீ.அ.வைதியலிங்கம், தி.மு. கழக சட்டமன்ற உறுப்பினர்கள்*

*மாவட்ட - மாநகர - ஒன்றிய - நகர - பகுதி - பேரூர் - வார்டு, கிளைக் கழகச் செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், கழக அனைத்து அணிகளின் நிர்வாகிகள் மற்றும் மதசார்பற்ற கூட்டணிக் கட்சிகளின் ஒட்டு மொட்டு நிர்வாகிகள், கழகத்தில் எந்தவித பலனையும் எதிர்பார்க்காமல் அல்லும் பகலும் அரும்பணியாற்றிய கழகத்தினர், உயிர் நாளமான அடிமட்டத் தொண்டர்கள் மற்றும் 6 தொகுதிகளில் வாக்களித்த வாக்காளர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் மாவட்ட தி.மு.க. சார்பில் கோடானு கோடி நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.*

*இவ்வாறு அமைச்சர் தா.மோ.அன்பரசன் அறிக்கையில் கூறியுள்ளார்.*

---

### தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலில் பதிவான

# வாக்குகள் 62 மையங்களில் காலை 8 மணிக்கு எண்ணப்படுகின்றன!

## தலைமைத் தேர்தல் அதிகாரி தகவல்!

சென்னை, ஏப்.28

தமிழ்நாடு சட்டமன்ற பொது தேர்தல் 23.4.2026 அன்று நடைபெற்றது. இத்தேர்தலில் பதிவான வாக்குகளை எண்ணும் பணி 04.05.2026 (திங்கட்கிழமை) அன்று 62 வாக்கு எண்ணும் மையங்களில் நடைபெறவுள்ளது.

வாக்குகள் எண்ணும் வழிமுறைகள்:

- வாக்குகள் எண்ணும் பணி சரியாக காலை 8:00 மணிக்குத் துவங்கும்.
- முதலில் காலை 8:00 மணிக்குத் தபால் வாக்குகள் எண்ணும் பணி துவங்கும்.
- 30 நிமிடங்களுக்கு பிறகு, அதாவது காலை 8:30 மணிக்கு மின்னணு வாக்குப்பதிவு இயந்திரத்தில் (EVM) பதிவு செய்யப்பட்ட வாக்குகள் எண்ணும் பணி துவங்கும்.
- மின்னணு வாக்குப்பதிவு இயந்திரத்தில் (EVM) பதிவு செய்யப்பட்ட வாக்குகளை எண்ணும் சுற்றுகளில், கடைசி சுற்று வாக்குகள் எண்ணும் பணி, தபால் வாக்குகள் எண்ணும் பணி முடிக்கப்பட்டவுடன்தான் துவங்கப்படும்.
- ஒவ்வொரு வாக்கு எண்ணும் மையத்திலும் ஒரு பகுதியில் தபால் வாக்குகளும், மற்றொரு பகுதியில் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களில் (EVM) பதிவு செய்யப்பட்ட வாக்குகளும் அதற்குரிய மேசைகளில் எண்ணப்படும். இரண்டிற்கும் தனித்தனியாக மேற்பார்வைக்காக உதவி தேர்தல் நடத்தும் அலுவலர் அளவில் (ARO Level) அதிகாரிகள் நியமிக்கப்படுவார்கள்.
- 500 தபால் வாக்குகளுக்கு ஒரு மேசை என்ற விகிதத்தில் தபால் வாக்குகள் எண்ணப்படும்.

**தபால் வாக்குகள்:**

- தேர்தல் பணியில் ஈடுபடுத்தப்பட்ட மொத்த 3.60 இலட்சம் அலுவலர்களில், வாக்காளர்களாக பதிவு செய்து, வாக்களிக்க விண்ணப்பித்த 2.88 இலட்சம் அலுவலர்கள் (80%) தபால் வாக்குகளைப் பதிவு செய்துள்ளனர்.
- இத்துடன் தேர்தல் பணிக்காக நியமனம் செய்யப்பட்ட காவல்துறை சார்ந்த அலுவலர்களும், மற்ற தேர்தல் Zonal/Sectorல் பணிபுரிந்த அலுவலர்கள், தேர்தல் கண்காணிப்பு குழுக்களில் பணியாற்றிய அலுவலர்களும் சேர்த்து மொத்தம் 3.36 இலட்சம் தேர்தல் அலுவலர்கள் தபால் வாக்குகளாகவும், 1.10 இலட்சம் அலுவலர்கள் தேர்தல் பணி சான்றிதழ் (Election Duty Certificate) பெற்று நேரடியாக வாக்குச்சாவடியிலும், வாக்களித்துள்ளனர்.
- 85+ மற்றும் மாற்றுத்திறனாளி வாக்காளர்கள் அளித்த படிவம் 12 D விண்ணப்பத்தின் பெயரில், மொத்தம் 1.73 இலட்சம் வாக்காளர்கள் தபால் வாக்கு பெற்று வாக்களித்துள்ளனர்.
- இதுவரை சேவை வாக்காளர்கள் (Service Voters) 18,000 நபர்கள் வாக்களித்துள்ளனர். இவர்களின் தபால் வாக்குகள் வாக்கு எண்ணிக்கை நாளான 04-05-2026 (திங்கட்கிழமை) அன்று காலை 8:00 வரை பெறப்படும்.
- வாக்குச்சாவடியில் வாக்களித்த வாக்காளர்கள் மட்டுமின்றி, கூடுதலாக 6.37 இலட்சம் வாக்காளர்களுக்கு வாக்களிக்க ஏதுவாக வசதிகள் மேற்கொள்ளப்பட்டு அவர்களிடம் வாக்குகள் பெறப்பட்டுள்ளன.

"தேர்தல் திருவிழா தமிழ்நாட்டின் பெருவிழா" என்று தமிழ்நாடு தலைமைத் தேர்தல் அதிகாரி தெரிவித்துள்ளார்.